# கடற்கரை கவியரங்கு– 659

## நாள்: 01-03-2026

# செயற்கை நுண்ணறிவு!

செயற்கை நுண்ணறிவு மனிதச் சிந்தைக்கு இணையாமோ!
செயல்படும் போதினிலே ஆற்றலாய்த் தெரிவது அழகாகும்!
செயல்நிலையில் இடரில்லை சிந்திக்கத் தனித்த மனமில்லை!
அயலாக அது ஏதும் தேடி நமக்கு என்றும் தருவதற்கில்லை!

இயல்பாக நாம் கொடுக்கும் யாவிலுமே ஆராந்தே சொல்லும்!
இருப்பதையே எடுத்தியம்பி கிளிப்பிள்ளைப் போலே செயலிடும்!
கருக்கொண்டு தேடும்மனம் காட்டும் வரையறையே கலனாகும்!
உருவாகும் சிந்தையெல்லாம் மனிதமனம் உருவாக்கித்தந்ததுவே!

உருவாகும் காதலில்லை உணர்வூட்டும் சிந்தையும் இல்லை!
தெருவிலே நாய்க்கூச்சல் கேட்டவை என்றும் திகைப்பதில்லை!
கருவாக்கித் தந்தவேலை கச்சிதமாய் அவை முடித்துவிடும்!
கருங்கூந்தல் அலைமோத கணினி விரலசைவில் மயக்கமில்லை!

- கவிஞர் கவிவளவன்.
21-01-2026